# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 213/பேரூ/2023**
**நாள் : 20.09.2023**

திரு. ஞா. மரியபிரான்சிஸ்,
சீர்காழி,
மயிலாடுதுறை மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். .... எதிர்மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, 9A/14, திருவள்ளுவர் நகர், 2வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஞா. மரியபிரான்சிஸ் என்பவரது 26.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.07.2023 அன்று பெறப்பட்டு, 213/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, 9A/14, திருவள்ளுவர் நகர், 2வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஞா. மரியபிரான்சிஸ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" தஞ்சாவூர் மாவட்டம், வடக்கு சேத்தி அகிழாங்கரை மேட்டுத் தெரு, வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி புல எண் 184/1–ல் எங்களுக்குச் சொந்தமான பட்டா இடம் இருக்கிறது. கடந்த 2012–ஆம் ஆண்டு செம்மண் சாலை போடுவதற்கான திட்டத்தின் போது, என்னுடைய தகப்பனார் ஞானதிக்கதின் சொந்த சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட மேற்சொன்ன இடத்தில் சாலை அமைப்பதற்கான ஜல்லி மற்றும் செம்மண் போன்ற பொருட்களை இறக்கினர். என்னுடைய தகப்பனாருக்கு ஒரு பெண் மற்றும் 6 ஆண் பிள்ளைகள் என நாங்கள் ஏழு பேர் ஆவோம். நாங்கள் அனைவரும் வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலர் (EO)மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாளில் எங்களுக்கு சொந்தமான பட்டா இடத்தில் சாலை அமைக்கக்கூடாது எனவும் இது சட்டத்திற்கு புறம்பான செயல்

என்பதால், சாலை அமைப்பதற்காக இறக்கிய பொருட்களை அப்புறப்படுத்த கோரியும் புகார் மனு கொடுத்தோம். அதன்பின் பேரூராட்சி உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களிடமிருந்து கடிதம் கிடைக்கப்பெற்றது. அப்போதைய வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர் (EO)உங்கள் இடத்திற்குள் சாலையோ, பாதாள சாக்கடையோ வராது, உங்கள் இடத்திற்கு பக்கத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில்தான் சாலை அமைப்போம் என்று உறுதிமொழி அளித்தார்.

ஆனால் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக செம்மண் சாலை மற்றும் பாதாள சாக்கடை குழாய் அமைக்கும் பணி மேற்சொன்ன, எங்களுக்கு சொந்தமான பட்டா இடத்தை ஆக்கிரமிப்பு செய்து எங்களுக்கு எந்தவிதமான முன்அறிவிப்பும் இல்லாமல் போடப்பட்டுள்ளது. அதில் ஒரு Manhole-உடன் கூடிய பாதாள சாக்கடை குழாய் எங்கள் பட்டா இடத்திற்குள் வருகிறது. எந்தவித முன் அறிவிப்பும் இன்றி, எங்களுக்கு சொந்தமான பட்டா இடத்தில் சாலை மற்றும் பாதாள சாக்கடை போட்டது என்பது மிகுந்த அதிர்ச்சியை தந்தது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட Contractor மற்றும் பேரூராட்சி அலுவலர் (EO) அவர்களிடம் மீண்டும் சென்று முறையிட்டோம்.. அதற்கு அவர் நில அளவையரை வைத்து ஒருமுறை அளந்து பாத்துவிட்டு பாதாள சாக்கடை குழாய்களை அகற்றுவது தொடர்பாக முடிவு எடுப்போம் என்று மெத்தனப் போக்குடன் பதில் சொன்னார்.

இத்தனை ஆண்டுகள் ஆன பின்னரும் நாங்கள் கேட்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் வல்லம் பேரூராட்சி நிர்வாகம் ஏதேனும் காரணம் கூறிக்கொண்டே காலநீட்டிப்புதான் செய்து வருகிறது. பேரூராட்சி செயல் அலுவலர்கள்தான் (Executive Officers) மாறி வருகிறார்களே தவிர, பேரூராட்சி நிர்வாகத்தின் அலட்சியத்தால் போடப்பட்ட பாதாள சாக்கடை மற்றும் செம்மண் ஜல்லி சாலையை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்க மறுக்கின்றனர்.

பட்டா இடத்தில் சாலை போடுவது தொடர்பாக முன்னெச்சரிக்கையாக மனு கொடுத்த பின்னரும் <u>பட்டா இடத்தில் சாலை போட்டது, பாதாள சாக்கடை குழாய்</u> அமைத்தது என்பது வல்லம் பேரூராட்சி நிர்வாகத்தின் அலட்சியப் போக்கையே காட்டுகிறது. இவ்வளவு அலட்சியப் போக்குடன் நடந்துக்கொண்டு இத்தனை ஆண்டுகளாய் ஒரு பொது அதிகார அமைப்பின் பொது அதிகாரிகள் எங்களை அலைகழிப்பது என்பது மிகுந்த அராஜக போக்காகும்.

வல்லம் தேர்வு நிலை பேரூராட்சியின் இந்த போக்கு 70 வயது ஆகிய மூத்தக்குடிமகனான, கண் பார்வை மற்றும் By-Pass Operation செய்து மிகுந்த சிரமத்திற்குட்பட்டு வரும் எனக்கு இந்த பிரச்சனை மேலும் மன உளைச்சலை தந்துள்ளது. இந்த பிரச்சனை தொடர்பாக இத்தனை ஆண்டுகளாய், சம்மந்தப்பட்ட பொது அதிகார அமைப்புகளில் பல மனுக்கள் கொடுத்தும், பல முயற்சிகள் மேற்கொண்டும் எந்த நடவடிக்கையும் இல்லை. இப்போது கடைசி நம்பிக்கையாக இங்கே தீர்வு கிடைக்கும் என்று உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை நாடி வந்துள்ளேன். ஆகவே தாங்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும், அவர்களுக்கு தண்டத்தொகை விதிக்குமாறும், எங்களுடைய பட்டா இடத்தின் வழியாக போடப்பட்டிருக்கும் செம்மண், ஜல்லி சாலை

மற்றும் பாதாள சாக்கடை குழாய்களை உடனே அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் தாழ்மையுடன் வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.09.2023 நாளிட்ட அறிக்கையில் "தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வல்லம் வடக்கு சேத்தி, அகிழாங்கரை மேட்டுத் தெருவில் புல எண் 184/1ல் மனுதாரருக்கு சொந்தமான இடம் உள்ளதாகவும், அந்த இடத்தில் பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் செம்மண், கருங்கல் கப்பி சாலை மற்றும் பாதாள சாக்கடை ஆள்நுழைவு தொட்டி (Manhole) அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை அப்புறப்படுத்தக் கோரி மனு அளித்துள்ளதன் பேரில் வருவாய்துறையின் மூலம் 02.09.2023 அன்று நிலஅளவை செய்து அறிக்கை பெறப்பட்டதில் ஆள் நுழைவு தொட்டியானது மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். மேலும் 2012–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கருங்கல்கப்பி சாலை முழுவதும் சேதமடைந்து தற்போது 10 விழுக்காடு மட்டுமே சாலையில் அமைந்துள்ளது. பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் ஆள்நுழைவு தொட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 2020–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஒரு ஆள் நுழைவு தொட்டியினை (Manhole)அகற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை தொடர்புகொண்டு உரிய வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை தொடரப்படும் என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் உள்ள கருங்கல் கப்பி சாலை அரசுக்கு சொந்தமான இடத்தில் மாற்றியமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) மனுதாரருக்கும், வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கும் 07.09.2023 அன்று இம்முறைமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) மனுதாரர் திரு.ஞா. மரியபிரான்சிஸ் உடல்நலக் குறைவின் காரணமாக இம்முறைமன்ற விசாரணையில் கலந்துகொள்ள இயலாத நிலையில், அவரது சார்பில் திரு.N.கிஷோர் என்பவர் 07.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, அகிழாலாங்கரை மேட்டு தெரு அருகில் புல எண் 184/1Cல் எனது பெரியப்பாவிற்கு சொந்தமான இடம் உள்ளது. மேற்கண்ட எங்களுக்கு சொந்தமான பட்டா இடத்தில் வல்லம் பேரூராட்சி பாதாள சாக்கடை மற்றும் சாலை அமைத்துள்ளது. இது குறித்து வெகு காலமாக புகார் மனு அளித்தும், பேரூராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட எங்களுக்கு சொந்தமான பட்டா இடத்தின் வழியில் போடப்பட்டிருக்கும் சாலை மற்றும் பாதாள சாக்கடை குழாய்களை உடனே அகற்ற ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது பெரிய தகப்பனாரால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ள 26.7.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் "என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 07.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, அகிழாங்கரை, மேட்டு தெரு அருகில் புல எண் 184/1Cல் மனுதாரருக்கு சொந்தமான இடம் குறித்து வருவாய் துறையின் மூலம் 2.9.2023 அன்று நில அளவை செய்து அறிக்கை பெறப்பட்டது. அதில் ஆள்நுழைவுத்தொட்டி (Manhole) ஒன்று மனுதாரரின் இடத்தில் அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆள் நுழைவுத் தொட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 2020ம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆள்நுழைவுத்தொட்டியை அகற்றிட பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2 மாத காலத்தில் மேற்கண்ட ஆள் நுழைவுத் தொட்டியை அகற்றி வேறு இடத்திற்கு மாற்றப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள, அவருக்கு சொந்தமான இடத்தில் உள்ள கருங்கல் கப்பி சாலை அகற்றப்பட்டு, வேறு இடத்தில் 6 மாத காலத்திற்குள் அமைக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவர் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குமூலம், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:- பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

> (c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules. அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியைச் சார்ந்த மனுதாரர் திரு. ஞா. மரியபிரான்சிஸ் என்பவர் தனது 26.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வடக்கு சேத்தி, அகிழாங்கரை மேட்டுத் தெரு, புலஎண் 184/1–ல் மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் செம்மண் கருங்கல் கப்பிசாலை மற்றும் பாதாள சாக்கடை ஆள்நுழைவு தொட்டியை (Manhole) வல்லம் பேரூராட்சியால் முறைகேடாக அமைக்கப்பட்டுள்ளதை புகாராக தெரிவித்து அதனை அகற்றிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரர் திரு.ஞா. மரியபிரான்சிஸ் என்பவருக்குச் சொந்தமான இடத்தில் வல்லம் பேரூராட்சியால் 2012ஆம் ஆண்டில் செம்மண் கருங்கல்கப்பிசாலை மற்றும் பாதாள சாக்கடை ஆள்நுழைவு தொட்டி (Manhole) அமைப்பதற்கான பணியினை மேற்கொள்ளும்போது மனுதாரர் சார்பில் 18.06.2012 அன்று மக்கள் குறை தீர்க்கும் மனுவினை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று, சாலைப்பணி மற்றும் ஆள் நுழைவு தொட்டி அமைப்பதற்கான பொருட்கள் மனுதாரரின் இடத்திலிருந்து அகற்றப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் 19.06.2012 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்து மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் மேற்காணும் பேரூராட்சிகள் உதவி இயக்குநரின் கடிதத்தை சுட்டிக்காட்டி தங்களது இடத்தில் போடப்பட்டுள்ள சாலை அமைப்பதற்கான பொருட்களை அப்புறப்படுத்தக் கோரிய பின்னரும், மனுதாரரின் இடத்தில் மண்சாலை மற்றும் ஆள்நுழைவு தொட்டி ஆகியவை முறைகேடாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றிடக்கோரி பேரூராட்சியில் பலமுறை முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் மனுதாரர் இறுதியாக இம்முறைமன்ற நடுவத்தில் புகார் செய்துள்ளார். இதற்கிடையில் வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 28.07.2023 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரர் புகார் தெரிவிக்கும் இடத்தினை நிலஅளவை செய்து அறிக்கை அனுப்புமாறு தஞ்சாவூர் வட்டாட்சியரை கோரியுள்ளார்.

தஞ்சாவூர் வட்டாட்சியர் தனது 06.09.2023 நாளிட்ட அறிக்கையில் வல்லம் குறுவட்ட அளவர் அறிக்கையின் அடிப்படையில் தஞ்சாவூர் வட்டம், வல்லம் வடக்கு சேத்தி கிராமத்தை சார்ந்த திரு. மரியபிரான்சிஸ் என்பவருக்கு சொந்தமான புல எண். 184/1C–இல் பேரூராட்சியின் கப்பி சாலையும், பாதாள சாக்கடை ஆள்நுழைவு தொட்டி ஒன்றும் அமைந்துள்ளது தெரிய வருகிறது என வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வட்டாட்சியர் அறிக்கையின் அடிப்படையில் மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் போடப்பட்ட ஆள் நுழைவுத்தொட்டி 2 மாத காலத்திற்குள் அகற்றுவதுடன் கருங்கல் கப்பி சாலையை 6 மாத காலத்திற்குள் வேறு இடத்திற்கு மாற்றப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரர் திரு. மரியபிரான்சிஸ் தனக்கு சொந்தமான இடத்திற்கு ஆதாரமாக மூலப்பத்திர நகல், பட்டா, சிட்டா நிலவரைப்படம் (FMB) ஆகியவற்றினை பேரூராட்சி நிர்வாகத்தினரிடம் அளித்தும், கடந்த 11 வருடங்களாக வல்லம் பேரூராட்சி நிர்வாகத்தினர் மனுதாரரை அலைக்கழிக்கப்பட்டுள்ளதும் அப்பட்டமாக தெரிய வருகிறது. மேற்கண்ட பட்டா, சிட்டா, FMB ஆகியவற்றின் நகல்களை இம்முறைமன்றத்திடமும் அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இச்செயல் வல்லம் பேரூராட்சி நிர்வாகத்தினரின் மெத்தனப் போக்கு, பணியில் அலட்சியம் மற்றும் பொறுப்பற்ற தன்மையையும் காட்டுகிறது. மேலும், வல்லம் பேரூராட்சியால் 2012 ஆம்

ஆண்டில் மனுதாரரின் இடத்தில் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளும்முன், பேரூராட்சிக்குப்பட்ட இடமா என்பதை உறுதி செய்யாமல், தனியார் இடத்தில் சாலை மற்றும் பாதாளசாக்கடை ஆள்நுழைவுதொட்டி (Manhole) மிகுந்த அலட்சியத்துடன் அமைக்கப்பட்டதால் அரசுக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது மற்றும் தற்போது அதனை அகற்றுவதால், மேலும் அரசுக்கு நிதியிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு மனுதாரரின் புகார் குறித்து 11 வருட காலத்திற்கு நடவடிக்கை எடுக்காமல் மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியும், அலைகழித்தும் பொறுப்பற்ற முறையில் செயல்பட்ட மற்றும் அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்த சம்பந்தப்பட்ட வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர்கள்/பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் 20 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ஞா. மரியபிரான்சிஸ்,
9A/14, திருவள்ளுவர் நகர்,
2வது தெரு, சீர்காழி,
மயிலாடுதுறை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வல்லம் தேர்வு நிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்

27/9/23